தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண். 77/ந/2021
நாள். 23.12.2021

திருமதி.R.ஷகிலாபானு,
கமுதி. – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
இராமநாதபுரம் நகராட்சி. – எதிர்மனுதாரர்

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி, முஸ்லீம் பஜார், 41 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திருமதி.R.ஷகிலாபானு அவர்களின் 25.08.2021 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 31.08.2021 அன்று பெறப்பட்டு 77/2021 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரது மனு கவனமாக பரிசீலினை செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

**ஆணை**

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி, முஸ்லீம் பஜார், 41 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திருமதி.R.ஷகிலாபானு அவர்கள் தன் மனுவில் எனது தந்தை ராவுத்தர்கனி அவர்கள் இராமநாதபுரம் இணை-2 சார்பதிவக ஆவண எண்.1577/1949 பத்திரத்தின் மூலம் கிரையம் பெற்ற சொத்தானது இராமநாதபுரம் டவுன், வெளிப்பட்டினம், கதவு எண்.24, பட்சிவளையக்காரத் தெருவில் (வார்டு -19) உள்ளது.

I. அதன் மீதான இராமநாதபுரம் நகராட்சி அலுவலக Town Survey Field Register படி அதில் கட்டப்பட்டுள்ள வீட்டின் மின்இணைப்பு (05301001479) ஆகியன இத்தேதி வரையிலும் என் தந்தை பெயரிலேயே உள்ளது. ஆனால் இராமநாதபுரம் நகராட்சி அலுவலகத்தில் அச்சொத்தின் மீது போடப்பட்ட சொத்து வரி விதிப்பானது (Assessment No.135/019/00175; old Assessment No: 135/19022) மட்டும் என் இரண்டாவது அண்ணன் அகமது ஜலால் பெயரில் தாக்கலாகி வருகிறது.

II. என் தந்தைக்கு என் தாய் உட்பட ஐந்து வாரிசுகள், என் தாயும் மரணமடைந்து விட்டார் என் மூத்த சகோதரி வெளிநாட்டிலேயே குடியுரிமை பெற்று அங்கேயே செட்டிலாகி விட்டார். அது போக எஞ்சியது நான் மற்றும் எனது மூத்த அண்ணன் நைனா முகம்மது ஆகிய இருவர் மட்டுமே நிலைமை இப்படியிருக்கையில் என் தந்தைக்கு பாத்தியமான ஷை சொத்தின் சொத்துவரி விதிப்பானது ஷை அகமது ஜலால் பெயரில் இடம்பெற இதர வாரிசுகளான நானோ, என் தாயோ, என் மூத்த சகோதரியோ அவருக்கு அனுமதி அளித்து எவ்வித ஆவணமும் வழங்கவில்லை.

III. என் மூத்த சகோதரர் நைனா முகம்மது மட்டும் ஷை சொத்தில் தனக்குரிய பங்கை விட்டுக்கொடுத்து அவருக்கு வெளிப்பட்டினம் சார்பதிவக பதிவு ஆவண எண்.1528/2000 பாகப்பிரிவினை பத்திரம் மூலம் உரிமை வழங்கியுள்ளார். இந்த ஒரு பத்திரம் மட்டுமே ஷை சொத்து சம்பந்தமாக ஷை அகமது ஜலால் வைத்திருக்கிறார்.

IV. ஆகவே, என் தந்தைக்கு பாத்தியமான ஷை சொத்தின் சொத்துவரி விதிப்பானது ஷை அகமது ஜலால் என்பவர் பெயரில் மட்டும் இடம்பெற்றுள்ளது ஏற்கத்தக்கதல்ல ஷை சொத்து உட்பட மூன்று சொத்துக்களுக்கு அவரவர் பெயர்களில் எந்த ஆதாரம் மூலம் வரிவிதிப்பு போடப்பட்டது என்று என் மகன் இராமநாதபுரம் நகராட்சி அலுவலகத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் கேட்கப்பட்டு, அவ்வழக்கு மாநில தகவல் ஆணையத்தில் (SA 2965/D/2015 & SA 4790/D/2018 & NC 666/D-2020) கிட்டத்தட்ட ஏழு ஆண்டுகளாக நடந்தும் இராமநாதபுரம் நகராட்சி அலுவலகத்திலோ, அதற்கான ஆவணங்கள் நகராட்சி பணியாளர்களால் நகராட்சி ஆவண வைப்பறையில் தேடப்பட்டும் கிடைக்கப் பெறவில்லை என்பதே பதிலாக வந்தது.

V. மாண்பமை டெல்லி உயர்நீதிமன்றம் Union of Inida VS Vishwas Bhamburkar – W.P.(C) 3660/2012 & CM 7664/2012 (stay) வழக்கில் கூறப்பட்ட உத்தரவை ஆதாரமாக வைத்து, மத்திய தகவல் ஆணையம் File No.CIC/DS/A/2013/001788SA : Date of decision : 29.08.2014-ல் ஒரு கோப்பானது வகுத்துரைக்கப்பட்ட சட்ட விதிகளின்படி அழிக்கப்பட்டது என்பதை நிரூபிக்காதவரை அக்கோப்பு அவ்வலுவலக வசத்தில்தான் தற்போது வரை உள்ளதாக எடுக்க முடியும் மற்றபடி "கோப்பு கிடைக்கவில்லை" அல்லது "கண்டுபிடிக்க முடியவில்லை" என்பதற்காக தகவல் கோரும் மனுக்களை தள்ளுபடி செய்யவியலாது. இந்த காரணங்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தால் ஓர் விதிவிலக்காக அங்கீகரிக்கப்பட்டவை அல்ல. "கோப்பு காணவில்லை" அல்லது "கோப்பு கிடைக்கவில்லை" என்று கூறுவது, Public Records Act, 1993 (PRA 1993) ஐ மீறுவதோடு மட்டுமல்லாமல், PRA 1993, பிரிவு 9ன் படி தண்டனைக்கும் உரியதாகும்" என்று உத்தரவிட்டுள்ளதையும் -- மத்திய தகவல் ஆணையம் File No. CIC/VS/A/2014/000779/SB; Date of decision : 02.02.2016 ல் கோப்பு கிடைக்கப் பெறவில்லை என்று கூறியது தொடர்பாக ஷை டெல்லி உயர்நீதிமன்ற உத்தரவை மேற்கொள்காட்டி அதற்கு காரணமான அதிகாரிகள் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்க உத்திரவிட்டுள்ளதையும், ஷை உயர்நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில், துறைரீதியான நடவடிக்கை எடுப்பது தொடர்பாக அனைத்து மாநில

தலைமைச் செயலாளர்களுக்கும் Government of Inida: Ministry of Tourism (RTI Cell) – F.No: 8(1) 2013-CC – office Memorandum அனுப்பியுள்ளதையும், மேலும் கோப்பு கிடைக்கப்பெறாவிட்டால் சம்பந்தப்பட்ட ஆவணங்களைத் தொலைத்த அதிகாரிகள் மீது வழக்குப்பதிவு செய்ய வேண்டும் என்று மாண்பமை மும்பை உயர்நீதிமன்றம் (Writ Petition No.6961 of 2012) உத்தரவிட்டுள்ளதையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும்.

VI. மேலும், சொத்துவரிவிதிப்பிற்கான கோப்புகள் நிரந்தர ஆவணம் என்றும், அது எவ்வாறு கிடைக்கப் பெறாமல் போனது. அதற்கு யார் காரணம், திருடப்பட்டிருந்தால் –காவல்துறையில் காணாமல் போனதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா? எந்த காலகட்டத்தில் இது கிடைக்கப் பெறாமல் போனது, ஆவணங்கள் அழிக்கப்பட்டிருந்தால், அழிப்புப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதா, அழிப்புப் பதிவேட்டின் ஆவணங்கள் மனுதாரருக்கு வழங்கப்பட்டதா" போன்ற விவரங்களையும் தமிழ்நாடு தகவல் ஆணையம் வழக்கு எண்.21176/விசாரணை/D/2014, நாள்:26.02.2016ல் தெரிவித்துள்ளதையும் மேல் முறையீட்டாளர் கோரும் தகவல்கள் 25 வருடங்கள் கடந்த நிலையில் கோப்புகள் கிடைப்பது அரிது என்று தெரிவித்திருப்பது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்று தமிழ்நாடு தகவல் ஆணையம் வழக்கு எண். SA 11431/F/2019, நாள்.09.01.2020 ல் தெரிவித்துள்ளதையும் ஆவணங்கள் காணாமல் போனதற்கு பொறுப்பான அலுவலர்கள் மீது துறைரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என இவ்வாணையம் கருதுகிறது என்று தமிழ்நாடு தகவல் ஆணையம் வழக்கு எண்.39470/A/2013, நாள்.17.11.2014-ல் தெரிவித்துள்ளதையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டுவதும் பொருத்தமாக இருக்கும்.

VII. ஆகவே நிரந்தரமாகப் பராமரிக்க வேண்டிய கோப்பான ஒன்று இராமநாதபுரம் நகராட்சி அலுவலகத்தில் இல்லை என்பது ஏற்கக்கூடியதாக இல்லை. அத்தகைய வரிவிதிப்பிற்கான நிரந்தர கோப்புகள் (என் மகனின் தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுவின் மூலம்) அலுவலகத்தில் இல்லை என்று தெரிந்தவுடன் அக்கோப்புகள் காணாமல் போகக் காரணமானவர்கள் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும் காவல் நிலையத்தில் புகார் அளித்திருக்க வேண்டும். ஆனால் இராமநாதபுரம் நகராட்சி ஆணையாளர் அதனைச் செய்யவில்லை.

VIII. மேலும் எனது மகனின் மேல்முறையீடு தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரணை நடத்தி ஆவணங்கள் வழங்கக் கூறிய தகவல் ஆணையத்தின் ஷை வழக்கு SA 4790/D/2018 உத்தரவின்படிகூட, ஷை நைனா முகம்மதுவிடம் மட்டும் விசாரணை நடத்தப்பட்டதே தவிர, ஷை அகமது ஜலாலிடம் இதில் கூறப்பட்டுள்ள வரிவிதிப்பு தொடர்பாக ஒரு சிறு விசாரணை கூட நடத்தப்படவில்லை.

IX. ஆதலால் ஷை சொத்தின் வரிவிதிப்பானது ஷை அகமது ஜலால் என்பவர் பெயருடன் எனது பெயரையும் இணைக்கக் கோரி கடந்த 08.07.2021 அன்று இராமநாதபுரம் நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு மனு அனுப்பினேன். ஆனால் எனது மனு மீது இதுவரையிலும் எவ்வித நடவடிக்கையும் இல்லை.

2. மேற்காணும் புகார்களை தெரிவித்த மனுதாரர் திருமதி.R.ஷகிலாபானு அவர்கள் மேற்படி சொத்தின் வரிவிதிப்பை ஷை அகமது ஜலால் என்பவர் பெயருடன் (என் தந்தை சொத்து என்பதால் வாரிசு அடிப்படையில்) தனது பெயரையும் இணைக்குமாறும், ஷை உயர்நீதிமன்றத்தின் மற்றும் தகவல் ஆணையத்தின் உத்தரவுகளின் அடிப்படையில் நிரந்தரமாகப் பராமரிக்க வேண்டிய கோப்பை தொலைத்த அதிகாரிகள் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்குமாறும் மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. இம்முறைமன்ற 03.11.2021 நாளிட்ட அழைப்பாணை மூலம் மனுதாரர் திருமதி.R.ஷகிலாபானு மற்றும் எதிர்மனுதாரர் இராமநாதபுரம் நகராட்சி ஆணையர் ஆகியோர் 11.11.2021 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு கோரப்பட்டிருந்தனர். மேற்கண்ட நாளில் மனுதாரர் ஆஜராகவில்லை இராமநாதபுரம் நகராட்சி ஆணையர் (I/C) விசாரணையில் நேரடியாக ஆஜராகி, தனது வாக்குமூலத்தில்

"இராமநாதபுரம் நகராட்சியில் திரு.அகமது ஜலால் என்பவர் வரி விதிப்பு எண்.135/019/175ல் தனது பெயரையும் சேர்த்திடுமாறு நகராட்சியில் மனுவினை அளித்துள்ளார். இந்நேர்வு தொடர்பான சொத்துவரி ஆவணங்கள் நகராட்சியால் கிடைக்கப்பெறவில்லை. மேலும் மேற்கண்ட மனுதாரரின் தந்தையின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசுதாரர் சான்றிதழ் போன்றவற்றை மனுதாரரால் மாநகராட்சியில் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கண்ட நிகழ்வில் சகோதரர்களுக்கிடையே சொத்து பிரச்சனை ஏற்பட்டு இந்நிகழ்வு தொடர்பாக நீதிமன்றத்தில் தற்போது வழக்கு நிலுவையில் உள்ளது என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

4. ஆணையர் தனது கடிதம் ந.க.எண்.2110/2021/அ1 நாள்.13.10.2021ல் கீழ்க்காணும் தனது எழுத்துபூர்வ அறிக்கையை சமர்ப்பித்துள்ளார். அதில் இராமநாதபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பட்சிபவளக்காரத் தெருவில் உள்ள டவுன் சர்வே எண்.53ல் கண்ட சொத்தில் வீடு கட்டுவதற்கு திரு.ஆர்.அகமது ஜலால் என்பவர் பதிவு செய்யப்பட்ட பாகபிரிவினை ஆவணத்தில் மூலம் பாத்தியப்பட்டது என்பதற்கு தன்னுடைய பாகப் பத்திரத்தினை இணைத்து கட்டிட அனுமதி உத்திரவு பெற்று அவ்விடத்தில் கட்டுமானம் கட்டி அனுபவம் செய்து வருகிறார்.

மேலும் இராமநாதபுரம் நகராட்சி கட்டிட அனுமதி உத்திரவு எண். (உரிமை ஆணை எண்.118/2000 நாள்.29.06.2000) உத்திரவின்படி வீடுகட்டி கடந்த 21 ஆண்டு காலமாக நகராட்சிக்கு செலுத்த வேண்டிய வரியினை முறையாக செலுத்தி அனுபவம் செய்து வருகிறார். மேலும் மனுதாரர் சொல்லி உள்ளபடி விபரங்களில் மனுதாரர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்பு முறைமன்றத்தில் கொடுத்துள்ள இந்த மனுவில் கோரியுள்ள அதே பரிகாரத்தை இராமநாதபுரம் மாவட்ட நீதிமன்றத்தில் மு.வ.எண். 4/2019ல் திருமதி.ஆர்.சகிலாபானு என்பவர் வழக்கு தாக்கல்

செய்துள்ளார். இந்த வழக்கானது இன்றைய தேதி வரை விசாரணையில் இருந்து வருகிறது என்று தெரிவித்து தமது எழுத்து பூர்வ அறிக்கையையும் (Written Statement) அனுப்பியுள்ளார் அதில்

- புகார்தாரர் கொடுத்துள்ள புகார் சம்பந்தமான பிரச்சனைக்கு ஏற்கனவே புகார்தாரர் இராமநாதபுரம் மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் முதலேற்பு வழக்கு எண்.4/2018 (Original Suit No.4/2018) வழக்கு தாக்கல் செய்து அவ்வழக்கு நிலுவையில் இருந்து வருவதால், இந்த புகார் மனு Res-Sub-judice நிலையில் தள்ளுபடி செய்யப்படக்கூடியதாக இருக்கிறது.

- மனுதாரர் கமுதியில் பல ஆண்டு காலமாக நிரந்தரமாக குடியிருந்து வருகிறார். மனுதாரர் கோரிக்கை வைக்கும் சொத்து இராமநாதபுரம் டவுனில் இருந்து வருகிறது. சொத்திலுள்ள வீட்டில் அகமது ஜலால் என்பவர் குடியிருந்து வருகிறார். அவரே பல ஆண்டு காலமாக மனுதாரர் குறிப்பிடக்கூடிய வீடு மற்றும் சொத்துக்கான வரிகளை செலுத்தி வருகிறார்.

- மனு பாரா 1ல் சொல்லியுள்ள விபரத்தை மனுதாரரே தக்க ஆவணங்கள் மூலமாக நிரூபித்துக் கொள்ள வேண்டும்.

- மனு பாரா 2ல் இராமநாதபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பட்சிவளையக்காரத் தெருவில் உள்ள டவுன் சர்வே எண்.53ல் கண்ட சொத்தில் வீடு கட்டுவதற்கு அகமது ஜலால் என்பவரால் கட்டிட அனுமதி உத்தரவிற்காக நகராட்சி அலுவலகத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டு கடந்த 10.06.2000 ம் தேதியன்று உரிமை ஆணை எண்.11/2000 உத்தரவின் மூலமாக அகமது ஜலால் அவர்கள் உத்தரவு பெற்று அவ்விடத்தில் வீடு கட்டி அந்த வீட்டிற்கு வரிப்பதிவுகள் ஏற்படுத்தி நகராட்சி அலுவலத்திற்கு எந்தவித வரிபாக்கியும் இல்லாமல் வரிசெலுத்தி வந்து, மேற்படி சொத்தானது அவருடைய அனுபவத்தில் இருந்து வந்து, மேற்படி அகமது ஜலால் என்பவர் கடந்த 19.06.2000 ம் தேதியன்று கட்டிட அனுமதி கோரி விண்ணப்பித்த போது தான் கட்டிடம் கட்ட உள்ள சொத்தானது அகமது ஜலாலுக்கு பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஆவணம் மூலம் பாத்தியப்பட்டது என்பதற்கு தன்னுடைய பாகப்பிரிவினை பத்திரத்தை இணைத்து கட்டிட அனுமதி உத்தரவு பெற்று அவ்விடத்தில் கட்டுமானம் கட்டி அனுபவம் செய்து வருகிறார்.

- மனு பாரா 3ல் மனுதாரர் சொல்லி உள்ள விபரங்களை மனுதாரரே தன்னுடைய ஆவணங்கள் மூலமாக நிரூபித்துக்கொள்ள வேண்டும். காரணம் அகமது ஜலால் என்பவர் இராமநாதபுரம் நகராட்சியில் அனுமதி உத்திரவு எண். (உரிமை ஆணை எண்.118/2000) நாள்.29.06.2000 உத்தரவின்படி வீடு கட்டி கடந்த 21 ஆண்டு காலமாக நகராட்சிக்கு

செலுத்த வேண்டிய வரி முதலானவைகளைச் செலுத்தி அனுபவம் செய்து வரும் நிலையில் தற்போது அகமது ஜலால் என்பவர் பெயரில் எற்பட்ட வரிவிதிப்பு சம்பந்தமாக மனுதாரர் ஆட்சேபனை செய்வதற்கு முரண்தடைபட்டுள்ளார். மனுதாரருடைய மனுவானது "தூங்கா இயல்புடைய நபர்களுக்கு மட்டுமே சட்டம் சால உதவும்" என்ற விதிப்படி மனுதாரர் மனு சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல.

- மனு பாரா 4ல் மனுதாரர் சொல்லி உள்ளபடி விபரங்களில் மனுதாரர் சமூகம் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்பு தீர்ப்பாயத்தில் கொடுத்துள்ள இந்த மனுவில் கோரி உள்ள அதே பரிகாரத்தைக் கோரி ஏற்கனவே இராமநாதபுரம் மாவட்ட நீதிமன்றத்தில் மு.வ.எண்.4/2019ல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கானது இன்றைய தேதி வரை விசாரணையில் இருந்து வரும் நிலையில் அந்த உரிமையியல் வழக்கிற்கு விரோதமாக சமூகம் தீர்ப்பாயத்தில் கொடுத்துள்ள இந்த மனுவானது இரட்டை இடர் என்ற விதிக்கு தள்ளப்பட்டு தள்ளுபடி செய்யக் கூடியதாக இருக்கிறது.

- மனு பாரா 5ல் சொல்லி உள்ள விபரங்கள் ஏற்புடையதல்ல. காரணம் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை கடந்த 2000ம் ஆண்டு அகமது ஜலால் என்பவர் இராமநாதபுரம் நகராட்சியில் சமர்ப்பித்து உரிய கட்டணத்தை செலுத்தி கட்டிட அனுமதி உத்தரவு பெற்று இராமநாதபுரம் பட்சிவளையக்காரத் தெருவில் வீடு கட்டி குடியிருந்து வரும் நிலையில் பல ஆண்டுகள் கழித்து அகமது ஜலால் பெயரில் எவ்வாறு வரி போடப்பட்டது என்ற தகவலை கேட்டு மனுதாரரின் மகன் இராமநாதபுரம் நகராட்சியில் விண்ணப்பித்த நிலையில் அதற்கு உரிய முறையில் நகராட்சி அலுவலகத்தில் நடவடிக்கை செய்து மனுதாரர் தரப்பில் கோரப்பட்ட ஆவணங்களையும் முழுமையாக தேடியும் கிடைக்கப்பெறாததால் மனுதாரர் தரப்பிற்கு உரிய முறையில் மனுதாரர் தரப்பிற்கு பதில் கொடுக்கப்பட்டுள்ளது.

- மனு பாரா 6ல் மனுதாரர் குறிப்பிட்டுள்ள மாண்புமிகு டெல்லி உயர்நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு மற்றும் பொது ஆவணச் சட்டம் 1993 சம்பந்தமாகவும் மனுதாரர் கூறியிருப்பதில் உண்மையில் மனுதாரர் கோரும் ஆவணங்கள் இராமநாதபுரம் நகராட்சி அலுவலகத்தில் தேடியும் கிடைக்கப் பெறாததாலேயே மனுதாரர் கோரிய தகவல்கள் இராமநாதபுரம் நகராட்சி அலுவலகத்தில் இருந்து வழங்கப்பட முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது என்பதே உண்மையாகும்.

- மனு பாரா 7ல் மனுதாரர் கூறி உள்ள விபரங்களில் மேற்கண்ட விதம் நகராட்சி அலுவலகத்தில் மனுதாரர் கேட்கும் ஆவணங்களின் நகல்கள் தேடியும் கிடைக்கப்பெறாததாலேயே மனுதாரர் தரப்பினற்கு உரிய முறையில்

பதில் அளிக்க முடியவில்லை. கடந்த 2000ம் ஆண்டில் இருந்து இன்று வரை இராமநாதபுரம் நகராட்சியில் பல நகராட்சி ஆணையர்கள் பணிபுரிந்து பணி மாறி சென்று உள்ளார்கள். மேலும் நகராட்சி அலுவலகத்தில் பல ஆவண பொறுப்பாளர்கள் பணிபுரிந்து பணி மாறுதல் ஆகி சென்று உள்ளார்கள். இருந்தாலும் மனுதாரர் தரப்பு மனுவிற்கு உரிய முறையில் நடவடிக்கை எடுத்து இராமநாதபுரம் நகராட்சியில் பதில் கொடுக்கப்பட்டு உள்ளது.

- மனு பாரா 8, 9ல் மனுதாரர் கூறி உள்ள விபரங்கள் ஏற்கதக்கதல்ல.

- மனுதாரர் மனு பாரா 10ல் சொல்லி உள்ள விபரத்தில் மனுதாரர் தான் இராமநாதபுரம் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மு.வ.எண்.4/2019 வழக்கில் தக்க உத்திரவு பெற்று இராமநாதபுரம் நகராட்சியில் பின்பு மனுக்கொடுத்து மனுதாரருடைய கோரிக்கையை நிறைவேற்றிக் கொள்ளலாம். ஆனால் அதற்கு விரோதமாக இந்த தீர்ப்பாயத்தில் மனுதாரர் கொடுத்துள்ள மனு சட்டப்படி தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

5. 11.11.2021 அன்றைய நேரடி விசாரணைக்கு மனுதாரர் ஆஜர் ஆகாததால் அவருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பளித்து 15.12.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 07.12.2021 அன்று அழைப்பாணை அனுப்பப்பட்டது. 15.12.2021 அன்று நேரடி விசாரணையில் மனுதாரர் கலந்து கொண்டு பின்வருமாறு தமது வாக்குமூலத்தை பதிவு செய்தார்.

“எனது தந்தை ராவுத்தர்கனி அவர்களுக்கு சொந்தமான இராமநாதபுரம் டவுன், வெளிப்பட்டிணம், பட்சிவளையக்காரத் தெரு, கதவு எண்.24-ல் அமைந்துள்ள வீட்டின் மீதான சொத்து வரி விதிப்பானது (Assessment No.135/019/00175 Old Assessment No.135/19022) எனது இரண்டாவது அண்ணன் அகமது ஜலால் என்பவரின் பெயரில் தாக்கலாகி வருகிறது. என் தந்தைக்கு பாத்தியப்பட்ட மேற்கண்ட சொத்தின் சொத்துவரி விதிப்பானது எனது அண்ணன் அகமது ஜலால் பெயரில் இடம்பெற இதர வாரிசுதாரர்களான நானோ அல்லது எனது தாய் அல்லது சகோதரியோ எவ்வித ஆவணமும் அளித்து சம்மதம் தெரிவிக்கவில்லை என இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மேற்கண்ட வீட்டின் மீது எவ்வித வழக்கும் நீதிமன்றத்தில் நிலுவையில் இல்லை. ஆனால் எனது தந்தைக்கு சொந்தமான கடையின் மீது மட்டுமே மாவட்ட நீதி மன்றத்தில் Original Suit No.4/2019 மற்றும் Original Suit No.154/2014 ஆகிய இரண்டு வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்கின்ற விவரத்தையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, மேற்கண்ட வீட்டின் மீது எவ்வித வழக்கும் நீதிமன்றத்தில் நிலுவையில் இல்லை என்பதை இம்முறைமன்றத்தின் முன் பதிவு செய்கிறேன்.

எனவே, மேற்கண்ட வீட்டின் மீதான சொத்துவரி விதிப்பில், வாரிசுதாரரான எனது பெயரையும் சேர்த்து ராமநாதபுரம் நகராட்சியால் சொத்துவரி விதித்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக் கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரது மனு அவருடைய வாக்குமூலம் இராமநாதபுரம் நகராட்சி ஆணையாளரின் வாக்குமூலம் மற்றும் அவருடைய அறிக்கை ஆகியவைகள் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது.

மனுதாரரான திருமதி.R.ஷகிலாபானு தனது தந்தை ராவுத்தர்கனி என்பவர் பெயரில் கதவு எண்.24 பட்சிவளையகாரத் தெருவில் உள்ள வீட்டிற்கு இராமநாதபுர நகராட்சி அலுவலக Town Survey Field Register படி அதில் கட்டப்பட்டுள்ள வீட்டிற்கு மின் இணைப்பு எண். 05301001479, இன்றைய தேதிவரையில் மனுதாரரது தந்தை பெயரில் உள்ளது. ஆனால் நகராட்சி அலுவலகத்தில் அச்சொத்தின் மீது போடப்பட்டுள்ள வரிவிதிப்பானது Assessment No.135/019/00175, Old Assessment No.135/190221 என்று மனுதாரரின் இரண்டாவது சகோதாரர் அகமது ஜலால் பெயரில் தாக்கலாகியுள்ளது. மனுதாரரின் தந்தைக்கு மனுதாரரின் தாய் உட்பட 5 வாரிசுகள் இருந்தும் மனுதாரரோ மற்றும் பிறவாரிசுதாரர்களோ எந்த விதமான அனுமதி கடிதமும் அளிக்காமல் வாரிசுகளில் ஒருவரான நைனா முகமது மட்டும் தனக்குரிய பங்கை பாகபிரிவினை பத்திரம் மூலம் விட்டு கொடுத்து வழங்கியுள்ள ஒரு பத்திரத்தை மூல ஆவணமாக வைத்து ராவுத்தர்கனி பெயரில் உள்ள சொத்தின் சொத்துவரியை அகமது ஜலால் பெயரில் இராமநாதபுரம் நகராட்சி ஆணையாளர் மாற்றம் செய்துள்ளது ஏற்கத்தக்கது அல்ல.

இதுபற்றி நகராட்சி ஆணையர் தமது வாக்குமூலத்தில் இந்நேர்வு தொடர்பான சொத்துவரி ஆவணங்கள் நகராட்சியால் கிடைக்கப்பெறவில்லை. மேலும் மேற்கண்ட மனுதாரரின் தந்தையின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசுதாரர் சான்றிதழ் போன்றவற்றை மனுதாரரால் நகராட்சியில் சமர்பிக்கப்படவில்லை என்று தெரிவித்திருப்பது ஏற்க இயலாது. இது தொடர்பாக மனுதாரரின் மனுவுடன் இராமநாதபுரம் வட்டாட்சியரால் வழங்கப்பட்ட வாரிசு சான்றிதழை சமர்ப்பித்துள்ளார். மேலும் இந்நிகழ்வில் சகோதர்களுக்கிடையே சொத்து பிரச்சனை ஏற்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதாக ஆணையர் பொதுவாக தெரிவித்துள்ளார். நீதிமன்றத்தில் கதவு எண்.24 பட்ஷிவளையக்காரத் தெருவில் உள்ள வீடு சம்மதமாக எந்தவித வழக்கும் நிலுவையில் இல்லை; மனுதாரரின் தந்தைக்கு சொந்தமான கடையின் மீது மட்டுமே (O.S.No.4/2019 (மற்றும்) O.S.No.154/2014) நிலுவையில் உள்ளது இதை ஆணையாளர் மறைத்து சொத்தின்மீது வழக்கு நிலுவையில் உள்ளதாக தெரிவித்திருப்பது அவர் ஒருதலைபட்சமாக செயல்பட்டுள்ளார் என்பது தெளிவாகிறது. இதனை இம்முறைமன்றம் வன்மையாக கண்டிக்கிறது.

எனவே, மனுதாரரின் தந்தையான ராவுத்தர்கனிக்கு பிற வாரிசுகள் இருப்பது தெரிந்தும் அவர்களிடம் ஒப்புதல் கடிதம் பெறாமல் வாரிசுகளில் ஒருவரான அகமது ஜலால் பெயருக்கு க.எண்.24 பட்ஷிவளையகாரத் தெருவில் உள்ள வீட்டிற்கு சொத்துவரி பெயர் மாற்றம் செய்து மனுதாரரின் தகவல் அறியும் உரிமை சட்டம் மூலம் கேட்ட கேள்விகளுக்கு தவறான பதில் அளித்து, சொத்து சம்மந்தமாக சகோதர்களிடையே வழக்கு நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ளது என்று உண்மைக்கு புறம்பான கருத்தை தெரிவித்து ஒருதலைபட்சமாக நடந்து கொண்ட இராமநாதபுரம்

நகராட்சியின் அப்போதைய ஆணையர் மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கையை எடுத்திடுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

கோப்புகள் தொலைந்து போனதாகக் கூறப்படும் நிகழ்வுக்குக் காரணமானவர்கள் மேல் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும், வீட்டுச் சொத்து மீது நீதிமன்றத்தில் மனுதாரரால் வழக்குத் தொடரப்பட்டுள்ளது என பொய்யாகவும் இம்மன்றத்தை திசைதிருப்பி ஏமாற்றிய ஆணையர் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் மற்றும் வீட்டுச் சொத்தைப் பொறுத்த மட்டில் மறைந்த ராவுத்தர்கனி வாரிசுதாரர்கள் அனைவரையும் சொத்துவரி கேட்பில் சேர்க்கவும் இம்மன்றம் ஆணையிடுகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர் இவ்வாணைகளைச் செயல்படுத்த அறிவுறுத்தப்படுகிறார்.

மேலும் அகமது ஜலால் பெயரில் உள்ள சொத்துவரியை ரத்து செய்து, ராவுத்தர்கனியின் அனைத்து வாரிசுதாரர்களின் பெயர்களை சேர்த்து புதியவரிவிதிப்பு செய்திடுமாறு இராமநாதபுரம் நகராட்சி ஆணையர் அவர்களை அறிவுறுத்தியும் இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2021 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 23 ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திருமதி.R.ஷகிலாபானு,
41, முஸ்லிம் பஜார், கமுதி – 623 603,
இராமநாதபுரம் மாவட்டம்.

2) ஆணையர்,
இராமநாதபுரம் நகராட்சி, இராமநாதபுரம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக.

24/12/21